**அறிக்கை அளிக்கக்கூடியது**

**இந்திய உச்ச நீதிமன்றம்**

**உரிமையியல் மேல்முறையீட்டு அதிகார வரம்பு**

**உரிமையியல் மேல்முறையீடு எண் 10771/2018**

**(சி.அ.ம.(உ)எண் 21786/2018)**

**டாக்டர் அமித் குமார் .....மேல்முறையீட்டாளர்**

**-எதிர்-**

**டாக்டர் சோனிலா மற்றும் பலர் .....எதிர்மேல்முறையீட்டாளர்கள்**

**தீர்ப்புரை**

**மாண்புமிகு நீதியரசர் திரு. சஞ்சய் கிஷன் கவுல்**

1. அனுமதி வழங்கப்பட்டது.

2. 07.05.2004 அன்று இந்து திருமண முறைப்படி, மேல்முறையீட்டாளரும், 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளரும் திருமணம் புரிந்துகொண்டனர், அத்திருமண பந்தத்திலிருந்து ஒரு மகனும் ( 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர்), ஒரு மகளும் ( 3-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர்) பிறந்தனர். அவர்கள் முறையே தற்போது 11 வயதும், 8 வயதுமுடையவர்கள்.அவர்களுடைய திருமணம் ஒருசில காலகட்டத்தில் பிரச்சனைக்குள்ளாகியதாகத் தெரிகிறது மற்றும் மீள் இணக்கத்திற்கான அனைத்து முயற்சிகளும் தோல்வியடைந்தன. மேல்முறையீட்டாளரும், 1-ஆம் எதிர்மேல் முறையீட்டாளரும் தகுதிபெற்ற மருத்துவர்கள், அவர்கள் மத்திய பாதுகாப்பு காவல் படையில் முழுவதற்குமாக பணி அமர்த்தப்பட்டிருந்தனர், அப்பதவிநிலை இன்றும் இருந்துவருகிறது.

3. மேல்முறையீட்டாளரும், 1-ஆம் எதிர்மேல் முறையீட்டாளரும் பரஸ்பர இசைவின் மூலம் விவாகரத்து தீர்ப்பாணைக்கு இறுதியாக ஒப்புக்கொண்டு, 1955-ஆம் ஆண்டு இந்து திருமணச் சட்டம், பிரிவு 13-பி-இன் கீழ் ஒரு மனுவைத் தாக்கல் செய்தனர். முதல் இடைக் கோரிக்கையானது, 2016 ஜூன் மாதத்தில் தாக்கல் செய்யப் பட்டது மற்றும் சட்டப்படியான ஆறு (6) மாதங்கள் முடிவுற்ற பின், இரண்டாம் இடைக்கோரிக்கை தாக்கல் செய்யப்பட்டு, 09.12.2016 அன்று விவாகரத்து தீர்ப்பாணை வழங்கப்பட்டது.

4. தற்போதைய மேல்முறையீட்டின் பொருட்டு, விவாகரத்து தீர்ப்பாணையின் இரண்டு தொடர்புடைய நிபந்தனைகள் கீழ்க்கண்டவாறு எடுகுறிப்பிடப்படுகின்றன:

> " ( 5) அதாவது, 1 மற்றும் 2-ஆம் மனுதாரர்கள் தத்தமது விருப்பப்படி வேறெவரையேனும் திருமணம் புரிந்துகொள்வதற்கு உரிமையளிக்கப்படுகின்றனர். வருங்காலத்தில் 1-ஆம் மனுதாரர், 2-ஆம் மனுதாரரின் கணவனுக்குரிய உரிமை ஏதும் பெறமாட்டார். அதேபோல் இன்றுமுதல் 2-ஆம் மனுதாரரும், 1-ஆம் மனுதாரரின் மனைவி என்ற உரிமையை இழந்துவிடுகிறார்.
>
> ( 6) அதாவது 1 மற்றும் 2-ஆம் மனுதாரர்களான இருவரும், 1-ஆம் மனுதாரருடன் இரண்டு குழந்தைகளும் வசித்துவருவதற்கும், அவர்களின் காப்புப்பொறுப்பேற்பதற்கும் ஒப்புக்கொண்டுள்ளனர். அமித்குமாரின் மகனான ஆரோக்கிய குமாரின் கல்வி, மருத்துவம் மற்றும் திருமணத்திற்கு 1-ஆம் மனுதாரர் வழிவகை செய்வார். அமித்குமாரின் மகளான ரியா குமாரியின் கல்வி, மருத்துவம் மற்றும் திருமணத்திற்கு 2-ஆம் மனுதாரர் வழிவகை செய்வார். "

5. பத்தி 5-ஆனது விவாகரத்து தீர்ப்பாணைக்குரிய இயல்பான முடிவு என்பது மேற்கூறப்பட்டதைப் பார்வை யிடுவதிலிருந்து தெரிகிறது. அதாவது, இருதரப்பினரில் எவரொருவரும் மறுமணம் புரியலாம் என்பதைக்

காணமுடிகிறது. இரு குழந்தைகளின் காப்புப்பொறுப்பு என்ற பிரச்சனையில் மேல்முறையீட்டாளரும், 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளரும் உடன்படிக்கை செய்து கொள்வதற்காக சட்டக்கூறு 6 வகைசெய்கிறது.அப்பொறுப்பு மேல்முறையீட்டாளரிடம் இருக்கவேண்டுமென ஒப்புக் கொள்ளப்பட்டது.ஆயினும், இயன்றவரையில் அவர்களுடைய ஒரேமாதிரியான நிதிபலத்தைக் கருத்திற்கொண்டு, மேல்முறையீட்டாளர் தன்னுடைய மகனின் கல்வி, மருத்துவம் மற்றும் திருமணத்திற்காக வகைசெய்வதாகவும், அதேவேளையில், 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளரும் மகளுக்கு அதேபோன்று செய்வதாகவும் ஒப்புக்கொண்டனர்.

6. தொடர்புடைய சமயத்தில், தரப்பினர்கள் நன்டெட்டில் பணியமர்த்தப்பட்டிருந்தனர், ஆதலால் தொடக்கத்தில் காப்புப்பொறுப்புக்கான ஏற்பாடு நன்றாகச் செயல்பட்டது. இருப்பினும், இப்பிரச்சனையானது, மேல்முறையீட்டாளர் நன்டெட்டிலிருந்து மாற்றப்பட்டதுமே எழுந்துவிட்டது. மேல்முறையீட்டாளர் ஜம்முவிற்கு மாற்றப்பட்டதும், 2 மற்றும் 3-ஆம் எதிர்மேல்முறை யீட்டாளர்களை பூனாவிலுள்ள உண்டுறைப் பள்ளி ஒன்றில் சேர்ப்பதற்கான ஏற்பாடுகளை செய்யவேண்டியதாகி விட்டது என்பது தெள்ளத்தெளிவாகத் தெரிகிற அதேவேளையில், அவர் ஜம்முவில் தன்னுடன் இருப்பதற்கு குழந்தைகளை கொண்டுவருவதற்கான சாத்தியத்தையும் மதிப்பீடு செய்தார். பரஸ்பர இசைவினால் பெற்ற விவாகரத்து தீர்ப்பாணையின்படி, 1-ஆம் எதிர்மேல் முறையீட்டாளர் எந்தவொரு காலகட்டத்திலும் தனது கடமைகளையாற்றுவதற்கு நிதிசார்ந்த பங்களிப்பு எதனையும் செய்யவில்லை என்பது மறுப்புக்கிடமற்ற உண்மையாகும். மேல்முறையீட்டாளர், 1-ஆம் எதிர்மேல் முறையீட்டாளருக்கு இந்தப் பொருண்மையைச் சுட்டிக்காட்டி பூனாவிலுள்ள உண்டுறைப் பள்ளியில் மகளின் சேர்க்கையினைப் பெறுவதற்காகவும், வாழ்வாதார செலவுகளை எதிர்கொள்ளவும் தேவைப்படும் தொகை நீங்கலாக, கொடுக்கப்படாத தொகைகளைக் கொடுப்பதற்கு கோரி, 28.03.2017-ஆம் தேதியிடப்பட்ட சட்ட அறிவிப்பு ஒன்றை

அனுப்பினார். இக்கோரிக்கையே தற்போதைய பிரச்சனைக்கு தூண்டுகோலாய் அமைந்ததாகத் தெரிகிறது.

7. 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர், 15.04.2017 அன்று அவருடைய வழக்குரைஞரின் மூலம் மேற்கூறப்பட்ட அறிவிப்புக்கு பதில் அறிவிப்பு ஒன்றை அனுப்பினார். இசைவுத் தீர்ப்பாணை அவருக்கு ஏற்கத்தக்கதாயில்லை என்ற பிரச்சனையை, மேற்படி பதில் அறிவிப்பு எழுப்பியது. எனவே, அவருடைய வழக்குரைஞர், குழந்தைகளின் காப்புப்பொறுப்பு குறித்த தீர்ப்பாணையின் நிபந்தனைகளை மாற்றியமைக்கும்படி கோர, அவருக்கு அறிவுறுத்தியிருந்தார். 2 மற்றும் 3-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர்களை உண்டுறைப் பள்ளிக்கு மாற்றியது என்பது மேல்முறையீட்டாளரின் ஒருசார்பான செயல் என்றும், மேற்சொல்லப்பட்ட செலவுகள் மிகைப்படியானவை என்றும் சாட்டுரைக்கப்பட்டது.

8. 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர், அவருடைய இளவர் குழந்தைகளின் காப்புப்பொறுப்பைக்கோரி, இந்து இளவர்நிலை மற்றும் காப்பாண்மைச் சட்டத்தின் பிரிவு 6-இன் கீழ் 31.05.2017-ஆம் தேதியிடப்பட்ட விண்ணப்பமொன்றைத் தாக்கல் செய்தார். அந்த விண்ணப்பத்தில், இளம் வயதுடைய 2 மற்றும் 3-ஆம் எதிர்மேல்முறையீட்டாளரின் எதிர்காலத்தை கருதி, 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர் மனரீதியான குழப்பத்திலுள்ளார் என்றும், விவாகரத்தின்போது, விண்ணப்பதாரருக்கு விருப்பமில்லாதபோதும் மேல்முறையீட்டாளரின் பேச்சைக் கேட்கும்படி கட்டாயப்படுத்தப்பட்டதாகவும், அச்சுறுத்தப்பட்டதாகவும் சாட்டுரைக்கப்பட்டுள்ளது. குழந்தைகளின் கல்வி பாதிக்கப்படக்கூடாது என்பதன்பொருட்டு, 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர், அவர்களின் காப்புப்பொறுப்பு முழுவதையுமே கேட்கவில்லை என்றும் வாதிடப்பட்டுள்ளது. மேல்முறையீட்டாளரால் அவருடைய வழக்குரைஞரின் மூலம் அனுப்பப்பட்ட 28.03.2017-ஆம் தேதியிடப்பட்ட அறிவிப்பின் மூலந்தான், குழந்தைகள் உண்டுறைப் பள்ளியில் சேர்க்கப்பட்டனர் என்பதை 1-

ஆம் எதிர்மேல்முறையீட்டாளருக்கு முதன்முதலாக தெரிவிக்கப்பட்டது என்பதே விண்ணப்பம் தாக்கல் செய்வதற்கு காரணமாய் அமைந்துள்ளது என்பதும் இவ்விண்ணப்பத்தில் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர் மறுமணம் புரிய தீர்மானித்துள்ளதால், 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர், குழந்தைகளின் காப்புப்பொறுப்பு மற்றும் கடமைப் பொறுப்பிலிருந்து விடுபட விரும்புகிறார். இக்காரணத்தின்பொருட்டுதான், அவர் மேல்முறையீட்டாளரிடம், அவர்களுடைய காப்புப்பொறுப்பை கொடுத்திருந்தார் என மேல்முறையீட்டாளரால் சாட்டுரைக்கப்பட்ட தகவலும் குறிப்பீடு செய்யப்பட்டுள்ளது. மேல்முறையீட்டாளரைப் பொறுத்தவரை, 1-ஆம் எதிர்மேல் முறையீட்டாளரின் சென்றுகாணும் உரிமைகள் குறித்த பிரச்சனை என்றமுறையில் வேறுசில சாட்டுரைகள் வைக்கப்பட்டுள்ளன. ஆனால் அவை கேள்விக்கிடமான பிரச்சனைக்குரியவையல்ல.

9. தீர்ப்பாணையின் நிபந்தனைகள் ஒப்புக் கொள்ளப்பட்டிருந்ததன்பேரில், அதுகுறித்து சிந்திக்கும்படி தரப்பினர்களுக்கு ஆறு மாத காலம் அவகாசம் கொடுக்கப்பட்டிருந்தது. அதன்பிறகுதான், அவை விவாகரத்து தீர்ப்பாணையில் இணைக்கப்பட்டிருந்தன என்பது வலியுறுத்தப்படவேண்டுமெனக் கோரி, பதிலறிவிப்பு ஒன்றைத் தாக்கல் செய்ததன்மூலம் மேல்முறையீட்டாளரால் மேற்கூறப்பட்ட விண்ணப்பம் எதிர்க்கப்பட்டது. மேல்முறையீட்டாளருக்கும், 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளருக்கும் இடையேயான திருமணம் காதல் திருமணமாக இருந்தாலும், 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளருக்கும், பதிலறிவிப்பில் பெயர் குறிப்பிடப்பட்ட அவருடைய பள்ளித் தோழனுக்குமிடையேயான சாட்டுரைக்கப்பட்ட விவகாரம் காரணமாக பிரச்சனை எழுந்தன எனவும் பதிலறிவிப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அவர் கையும் களவுமாக பிடிபட்டார் எனவும், ஆனால் மன்னித்துவிடும்படி அவர் கெஞ்சி கேட்டுக்கொண்டதால், மேல்முறையீட்டாளர் உறவைத் தொடர்ந்துப்பேண தீர்மானித்தார் எனவும் சாட்டுரைக்கப்பட்டது. இது, சாட்டுரைக்கப்பட்டிருப்பினும், அத்தொடர்பு முடிவுக்கு வரவில்லை. இது

மட்டுமல்ல, 2016-ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் அவர், விண்ணப்பத்தில் பெயர்க்குறிப்பிடப்பட்ட, அதே நிறுவனத்தில் பணிபுரியும் நபர் ஒருவருடன் தொடர்பு வைத்துக் கொள்ள தொடங்கியதாகவும், அதைக் கண்டுபிடித்ததன் காரணமாக, 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர் தற்கொலை செய்துகொள்ளவும் முயற்சி செய்தார், அதற்கான மருத்துவ ஆவணங்களும் உள்ளன. பொதுவாக, சமுதாயத்தில் தரப்பினர்களின் நன்மதிப்பை நிலைநிறுத்தும் பொருட்டு, 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளருக்கு எதிரான இந்தக் குற்றச்சாட்டுகளை முன்வைக்காமலேயே இந்த விவாகரத்துக்கு உடன்பட்டுள்ளதாகச் சொல்லப்பட்டுள்ளது. மாவட்ட நீதிபதி, 04.09.2017 அன்று விண்ணப்பத்தை முடிவு செய்தார். குழந்தைகளின் நலனே தலையாய பரிசீலனையாகும் என்பதை நீதிமன்றம் கவனத்தில் கொண்டது. இரு தரப்பினர்களும் நன்கு தகுதிபெற்ற சரிசமமான வேலை மற்றும் தகுநிலையை அனுபவித்து வந்தனர் மற்றும் சட்டப்படியாக ஆறு மாத காலம் முடிந்தபிறகே விவாகரத்திற்கான தீர்ப்பாணையின் நெறிமுறைகளுக்கும், நிபந்தனைகளுக்கும் பரஸ்பர இசைவளித்திருந்தனர் என்பதை நீதிமன்றம் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டது. ஆதலால், குழந்தைகளின் காப்புப் பொறுப்பை மேல்முறையீட்டாளருக்கு மறுக்க காரணம் ஏதுமில்லை. ஆனால், இரு தரப்பினர்களும் வெவ்வேறு இடத்திலிருக்கின்றனர் என்ற பொருண்மையைக் கருத்திற்கொண்டு, சென்றுகாணும் உரிமைக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

10. இந்த உத்தரவானது, 2017-ஆம் ஆண்டு செப்டம்பரில் நீ.பே.ம. எண். 12432/2017-இல் உயர் நீதிமன்றம் முன்பு 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளரால் எதிர்க்கப்பட்டது. நீதிப்பேராணை மனு இதுவரையில் நிலுவையிலிருந்து வரும்நிலையில், 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர் குடும்பநல நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட பரஸ்பர இசைவின் மூலமான விவாகரத்து தீர்ப்பாணையானது, கட்டாயப்படுத்தியும், மோசடியாகவும், திரித்துக்கூறியும் பெறப்பட்டதால், அது அறவே செல்லாதது, எனவே தரப்பினர்களுக்கிடையேயான திருமணத்தைப் பாதிக்காது என்ற

விளம்புகைக்காக உரிமையியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்தார். இவ்வுரிமை வழக்கும் இதுவரை நிலுவையிலிருந்து வருவதாகச் சொல்லப்படுகிறது.

11. வழக்கு நடவடிக்கைகளின்போதே, சமரசத்திற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டும், அது தோல்வியுற்றது. பம்பாய் உயர் நீதிமன்றத்தின் கற்றறிந்த தனியமர் நீதியரசர் குழந்தைகளுடன் கலந்துரையாடிய பிறகு, 12.06.2018 அன்று உத்தரவொன்றைப் பிறப்பித்தார். மேல்முறையீட்டாளர் உத்தரவிற்கு முன்னதாகவே சமீபத்தில் திருமணம் புரிந்துகொண்டார் என்பதையும், அவருடைய இரண்டாம் மனைவிக்கு முதல் திருமணத்தின் மூலம் பிறந்த மகன், அவர்களுடன் தற்போது வசித்து வருகிறான் என்பதை பின்னிட்டு வெளியிட்டதையும் கற்றறிந்த நீதியரசர் குறித்துக்கொண்டார். அக்காலகட்டத்திலேயே மேல்முறையீட்டாளர் ஜம்முவிலுள்ள பள்ளி ஒன்றில் குழந்தைகளை சேர்த்துவிட்டிருந்தார். 1-ஆம் எதிர்மேல் முறையீட்டாளருடன் இருப்பதையே மகனும், மகளும் விரும்புகின்றனர் என்றாலும், அவர்கள் அவர்களுடைய தந்தையையும் அதேயளவில் நேசிக்கின்றனர் என்ற முடிவுக்கு நீதியரசர் வருவதற்கு குழந்தைகளுடனான கலந்துரையாடல் வழிவகுத்துள்ளதென சொல்லப்படுகிறது. 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளரான தாயாரின் விருப்பத்திற்கு தனியமர் நீதியரசர் முன்னுரிமை அளித்து, குழந்தைகள் ஓராண்டு காலம் தாயின் காப்புப்பொறுப்பில் இருந்து, அவர்களது தாயார் எங்கு வசிக்கின்றாரோ, அந்த இடத்திலுள்ள பள்ளியில் அவர்களை சேர்த்து, அவர்களுக்கு கல்வியளிக்கவும், தந்தைக்கு சென்றுகாணும் உரிமைகளை அளிக்கவும் உத்தரவிட்டார். சென்றுகாணும் உரிமைகளை நடைமுறைப்படுத்தும் வகையில் பல உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டன.

12. மேல்முறையீட்டாளர், இந்த உத்தரவால் மனக்குறையுற்று, சி.அ.ம. (உரிமையியல்) எண் 16667/2018- ஐ தாக்கல் செய்தார். அனுமதி வழங்கப்பட்டு, இந்த மேல்முறையீடு எண் 6500/2018-ஆனது, இசைவுத்

தீர்ப்பாணையிலுள்ள கூறுகளைக் குறிப்பிட்டு, 11.07.2018 அன்று முடிக்கப்பட்டது. உத்தரவு பிறப்பிக்கும்போது, அது, உயர் நீதிமன்றத்தால் கவனிக்கப்படவில்லை. பிறகு, வழக்கு புதிய பரிசீலனைக்காக உயர் நீதிமன்றத்திற்கு திருப்பப்பட்டது.

13. குழந்தைகளுடன் கலந்துரையாடியதன் அடிப்படையில், பம்பாய் உயர் நீதிமன்றத்தின் கற்றறிந்த தனியமர் நீதியரசர், மீண்டும், 25.07.2018-ஆம் தேதியிட்ட எதிர்ப்புக்குள்ளான உத்தரவின் மூலம் தாயாரிடம் குழந்தைகளின் காப்புப்பொறுப்பையும், தந்தைக்கு சென்றுகாணும் உரிமைகளையும் அளித்து உத்தரவிட்டார். விவாகரத்து தீர்ப்பாணையிலுள்ள நிபந்தனைகள், இந்நாள் வரையிலும் மாற்றப்பட்டிருக்கவில்லை என்று மேல்முறையீட்டாளரின் சார்பாக வைக்கப்பட்ட பணிந்துரையை உயர் நீதிமன்றமானது கவனித்தபிறகு, ஒரு வருடத்திற்குப்பிறகு வழக்கு மறுஆய்வு செய்யப்படவேண்டி, 19.03.2019 அன்று அதை தள்ளிவைத்தது.

14. மேல்முறையீட்டாளரையும், எதிர்மேல்முறையீட்டாளரையும் நேரடியாக முன்னிலையாக நாங்கள் உத்தரவிட்டோம். அவர்களுடன் நாங்கள் கலந்துரையாடினோம். 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளருடன் தொடர்பு வைத்துள்ளதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ள அதிகாரிக்கு எதிராக நடவடிக்கைகள் தொடங்கப்பட்டிருந்ததாக காண்பிக்கும் ஒருசில வாதுரைகளுக்கு, மேல்முறையீட்டாளருக்கான கற்றறிந்த வழக்குரைஞர் எங்கள் கவனத்தை ஈர்த்தார். மத்திய பாதுகாப்பு காவல் படையின் தலைமை இயக்குனரால் வழங்கப்பட்ட 14.03.2017-ஆம் தேதியிடப்பட்ட விவரக்குறிப்பானது, குற்றச்சாட்டின் கூறுகளுக்கு துணைநிற்கும் ஒழுங்கீன குற்றச்சாட்டுகளைக் குறிப்பிடுகிறது மற்றும் மேற்சொன்ன அதிகாரி, 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளருடன் அலுவலக நேரத்தில் பேசுகிறபோது அநாகரீகமான சொற்களைப் பயன்படுத்தினார் என்பது குறிப்பாகச் சாட்டுரைக்கப்பட்டுள்ளது. அதனுடைய விவரங்களும் விரிவாக

எடுத்துரைக்கப்பட்டுள்ளது. அதன் விசாரணையும் இதுவரை நிலுவையிலேயேயுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. நீதிமன்றத்தின் கலந்துரையாடலின்போது, மேல்முறையீட்டாளர் மற்றும் அவருடைய இரண்டாவது மனைவியின் கூற்றுப்படி, 2 மற்றும் 3-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர்கள், மேல்முறையீட்டாளருடன் தங்கியிருக்கவேண்டும் மற்றும் மேல்முறையீட்டாளரின் இரண்டாவது மனைவி அவர்களை கவனித்துக்கொள்ள வேண்டும் என்ற புரிதலுடன்தான் திருமண ஏற்பாடு செய்யப்பட்டது என்பது வெளிச்சத்திற்கு வந்தது. மேல்முறையீட்டாளரின் இரண்டாம் மனைவி வணிக நிர்வாகத்தில் முதுகலை பட்டதாரி ஆவார். முன்னதாக, ஒரு வங்கியில் பணிபுரிந்து வந்தார். ஆனால், வீட்டுப் பொறுப்புகளைக் கவனித்துக்கொள்ள அவர் பணியைத் துறந்துவிட்டார். இசைவுத் தீர்ப்பாணையிலுள்ள கடப்பாட்டின்படி, ஒருபுறம் மகளுக்காக, 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளரால் மேல்முறை யீட்டாளருக்கு நிதியுதவி ஏதும் செய்யப்படவில்லை. மறுபுறம், அவர் தொடர்புவைத்திருப்பதாக சொல்லப்படும் நபருக்கு கணிசமான தொகைகளை மாற்றிக்கொண்டிருந்தார் எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார். நீதிமன்ற விசாரிப்பின் அடிப்படையில், 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர், தனது வங்கி விவரங்களை மேல்முறையீட்டாளர் அறிந்து கொள்ளும் உரிமை எடுத்துக்கொண்டிருந்தார் என்ற பொருண்மையை தொடக்கத்தில் குற்றமாக எடுத்துக் கொண்டார். ஆனால், ஒரு குறிப்பிட்ட விசாரிப்பின் அடிப்படையில், அவர், தன்னுடன் பணிபுரிபவருக்கு தொகை மாற்றியதை ஒப்புக்கொண்டார். ஆனால், அது அவருடைய சொந்த விசயம் என்று தெரிவித்தார். அவர் ஒரு நல்ல மனைவியா, இல்லையா என்பது முக்கியமல்ல என வாதிட்டு வேண்டினார், ஆனால், கற்றறிந்த தனியமர் நீதியரசர் குழந்தைகளுடன் கலந்துரையாடியதிலிருந்து, அவர் ஒரு நல்ல தாயார் என்பது தெளிவாகிறது என்பதே உண்மை.

15. நாங்கள் இவ்வழக்கை ஆழ்ந்து ஆராய்ந்துள்ளோம். முதன்மையாக அக்கறை கொள்ளவேண்டியதான, 2 மற்றும் 3-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர்களான இந்த இளம் குழந்தைகளின் நலன் இதில் உள்ளடங்கியிருப்பதால், இப்பிரச்சனை மிகவும் எளிதானதன்று. அவ்வாறு கூறும் அதேவேளையில், இந்த குழந்தைகள் மிகவும் இளையோராகவும், முதிரா மனங்கொண்டவர்களாகவும் இருக்கின்றனர் என்பதைக் கருத்திற்கொள்ளவேண்டும், மேலும், கலந்துரையாடல் மட்டுமே கருத்திற்கொள்ளப்பட வேண்டிய காரணக்கூறுகளுள் ஒன்றாகும்.

16. எங்களது கருத்தில், இரு குழந்தைகளின் காப்புப்பொறுப்பை மேல்முறையீட்டாளருக்கு அளிக்கும் முடிவானது, உரிய கட்டத்தில் தரப்பினர்களால் எடுக்கப்பட்ட உணர்வுபூர்வமான முடிவு என தெளிவாகத் தெரிவதால், அதை கட்டாயப்படுத்தி, நெருக்கடி அல்லது மோசடி செய்து பெறப்பட்ட முடிவென வகைப்படுத்துவது அரிதே.1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர் நன்கு படித்து, மருத்துவ தொழில் புரிபவர். விவாகரத்து தீர்ப்பாணை வழங்குவதற்கு முன்பு தீர்வு நிபந்தனைகள் குறித்து சிந்திப்பதற்கு தரப்பினர்களுக்கு ஆறு (6) மாத கால இடைவெளியிருந்தது, இது குறித்து மீண்டும் சிந்திப்பதை தரப்பினர்கள் தக்கதெனக் கருதினால், இச்சட்டப்படியான காலத்தை தரப்பினர்கள் பயன்படுத்திக் கொள்ளத்தக்கதாகும். சட்டக்கூறு 5-இன்படி தரப்பினர்கள் மறுமணம் புரிய உரிமையளிக்கப்பட்டனர் என்பதற்கு அவர்கள் தெளிவாக இசைவளித்திருந்தனர். காப்புப்பொறுப்பின் நிபந்தனைகளின் படியும், குறைந்தபட்சம் தரப்பினர்களிடையேயான பேச்சளவிலான காப்புப்பொறுப்புரிமைகளின் பேரிலும் மேற்படி திருமணம் எந்தவொரு பாதிப்பையும் ஏற்படுத்தாது. 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர் ஆரம்பத்திலேயே மகளுக்கான செலவுகளின் பொருட்டு எதையும் பங்களிக்காமல் தரப்பினர்களுக்கிடையேயான உடன்படிக்கைக்கு மாறாக

நடந்து கொண்டதால் மேல்முறையீட்டாளரே இரு குழந்தைகளுக்கான அனைத்து செலவுகளையும் ஏற்றுக்கொண்டுள்ளார்.

17. மேல்முறையீட்டாளர், 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளரிடம் நிதி சம்பந்தமாக பங்களிக்க கேட்டபோதுதான் குழந்தைகளின் காப்புப்பொறுப்பைக் கோரும் எண்ணம் அவருக்கு ( 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளருக்கு) எழுந்தது. நிதிவகையிலான பிரச்சனையால் அல்ல, ஆனால், 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர், தன்னுடைய சொந்த மகளுக்காக பங்களிக்க விருப்பமில்லாத அதேவேளையில் அவருடன் பணிபுரியும் ஒருவருக்கு தொகையை மாற்றிக்கொண்டிருக்கிறார். தொடக்கத்தில் காப்புப்பொறுப்பிற்காக தொடரப்பட்ட நடவடிக்கையென இது தோன்றினாலும், அதன்பின்னர் மேல்முறையீட்டாளர் ஏதொரு தொகையும் கோராமலிருப்பதற்கு, விவாகரத்து தீர்ப்பாணையை இரத்து செய்யக்கோரி அவருக்கு நெருக்கடி கொடுக்கும் ஒரு முயற்சியே இதுவாகும் எனத் தெளிவாகிறது. வாதியானவர், தனது கோரிக்கையின் ஏதொரு பகுதியையும் உட்கருத்துடன் துறப்பாரானால், அவ்வாறு உரிமை துறந்த பகுதி குறித்து, பின்னிட்டு அவர் வழக்கு தொடுக்கமுடியாது என்பதை குறித்துரைத்து, 1908-ஆம் ஆண்டு உரிமையியல் விசாரணைமுறைச் சட்டம், கட்டளை 2, விதி 2-க்கு நாங்களும் கவனம் செலுத்துகிறோம்.1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர் காப்புப்பொறுப்பு கோரும் அவருடைய உரிமைகளைத் துறந்துவிட்டார், அதனால் " அவரால் தாக்கல் செய்யப்பட்ட உரிமை வழக்கே, மிகவும் சந்தேகத்திற்குரியதாகும்.

18. அத்தகைய நிபந்தனைகளை மாற்றியமைக்கும் தேவையில்லாத நிலையில், மிகவும் குறிப்பாக, மேல்முறையீட்டாளர் அவருடைய கடமைப்பொறுப்பிலிருந்தோ அல்லது குழந்தைகளைக் கவனித்துக்கொள்வதிலிருந்தோ தவறிவிட்டால், குழந்தைகளின் நலனுக்காக அவ்வாறான விரும்பத்தக்க மாற்றம் எழலாம் என்பதைக் கூற நாங்கள்

விழைகிறோம். மேல்முறையீட்டாளரின் இரண்டாவது திருமணத்தை அவருக்கு எதிராக சொல்வதோ அல்லது அவருடைய இரண்டாம் மனைவியின் குழந்தை அவருடன் தங்கியிருக்கும் பொருண்மையினாலோ, 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளரின் சம்மதத்துடன், அவரிடம் திட்டவட்டமாக அளிக்கப்பட்டிருக்கின்ற அவருடைய இரு குழந்தைகளின் காப்புப்பொறுப்புரிமைகளைப் பறிக்க இயலாது.

19. மேல்முறையீட்டாளர் குழந்தைகளைக் கவனித்துக் கொள்ளவில்லை என்பதைப்போன்று எதிர்ப்புக்குள்ளான உத்தரவைப் பார்வையிடுவதிலிருந்து தெரிகிறது. குழந்தைகள் தங்களுடைய தந்தையிடம் பாசமாக உள்ளனர். மேல்முறையீட்டாளரின் பணியிலுள்ள நெருக்கடிநிலைமை காரணமாக, குழந்தைகளை சிலகாலம் உண்டுறைப் பள்ளியில் சேர்த்து வைத்திருந்தார், அந்த நெருக்கடிநிலையும் தற்போது இல்லை. தரப்பினர்கள், தாங்கள் மாற்றத்தக்க பணியில் உள்ளதை அறிவர். குழந்தைகளின் நலனைக் கருதி, மேல்முறையீட்டாளரிடமே காப்புப்பொறுப்பை அளிக்க தரப்பினர்களால் மனப்பூர்வமாக முடிவெடுக்கப்பட்டது. மேல்முறையீட்டாளரின் இரண்டாம் மனைவி படித்த பெண்மணியாவார். மேல்முறையீட்டாளர் வாழ்வில் முன்னேற்றமடைய முடிவெடுத்து, இரண்டாம் திருமணம் புரிந்துகொண்டார் என்பதாலேயே, மேல்முறையீட்டாளருக்கும், 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளருக்கும் இடையே ஏற்பட்ட உடன்பாட்டின்படி, குறிப்பாக, அவர் குழந்தைகளைக் கவனித்துக்கொண்டு, தனது கடமைபொறுப்புகளிலிருந்து பின்வாங்காதபோது குழந்தைகளின் காப்புப்பொறுப்பு எதுவேயாயினும், அதை அவரிடமிருந்து பறிப்பதற்கு ஏதொரு அடிப்படையும் இல்லை. 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர், நிதிதொடர்பான கடப்பாடுகளைத் தவிர்க்கும்பொருட்டு, இந்த நடவடிக்கைகளைத் தொடங்கியதில், அது எதிர்ப்புக்குள்ளான உத்தரவிலும், மேலும், ஒரு தனிப்பட்ட உரிமையியல் நடவடிக்கையிலும் முடிவுற்றது. விவாகரத்துக்கான பரஸ்பர இசைவினையும், மேல்முறை யீட்டாளர்

ஏற்கெனவே மறுமணம் புரிந்துவிட்டார் என்பதையும் ஏற்றுக்கொள்கிறபோது, விவாகரத்து தீர்ப்பாணையானது அறவே செல்லாதது எனக் கூறி, 1-ஆம் எதிர்மேல் முறையீட்டாளர் தற்போது ஏன் இவ்வுரிமை வழக்கைத் தாக்கல் செய்ய விரும்புகிறார் என்பது மதிப்பிடப்படவில்லை. 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர் அதேதுறையில் பணிபுரியும் வேறொரு நபருடன் தொடர்பு வைத்திருப்பதற்கு எதிரான குற்றச்சாட்டுகள் குறித்த அதன் விசாரணை இன்னமும் நிலுவையிலுள்ளதால் அவற்றின் விவரங்களை நாங்கள் ஆராயவில்லை, மேலும், தற்போதுள்ள வழக்கு நடவடிக்கைகளில் அவ்வாறு செய்வது உகந்ததாக இருக்காது. தரப்பினர்கள், தொடக்கத்திலேயே ஆழ்ந்து சிந்தித்து, குழந்தைகளின் நலனுக்காக, மேல்முறை-யீட்டாளரிடம் காப்புப்பொறுப்பை கொடுத்துவிட்டபோதும், இந்த தேவையில்லாத வழக்கிற்குள் செல்ல எதற்காக மேல்முறையீட்டாளர் நிர்பந்திக்கப்பட்டுள்ளார்? என்பதற்கான காரணம் ஏதும் நாங்கள் காணவில்லை.

20. குழந்தைகள் இயல்பாகவே உண்டுறைப் பள்ளியில் தங்குவதைவிட பெற்றோர்களுடன் தங்குவதையே விரும்பும் சமயத்தில், கற்றறிந்த தனியமர் நீதியரசர் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தியதற்கு தேவையில்லா முக்கியத்துவம் கொடுத்துள்ளார் என்பது எங்களது கருத்தாகும். 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளருக்கு, விடுமுறை காலத்தில் வழங்கப்பட்ட சென்றுகாணும் உரிமைகளை அனுகூலமாக எடுத்துக்கொண்டு, அவர் தன்னிடம் குழந்தைகள் தொடர்ந்து தங்கவேண்டும் என்ற தற்போதைய கோரிக்கை அனுமதிக்கப்பட இயலாது.

21. எனவே, கற்றறிந்த தனியமர் நீதியரசர் அவர்களால் குறுக்கீடு செய்யப்பட்ட 25.07.2018-ஆம் தேதியிடப்பட்ட எதிர்ப்புக்குள்ளான உத்தரவு நியாயமற்றது என்பதும், 09.12.2016-ஆம் தேதியிடப்பட்ட குடும்பநல நீதிமன்றத்தின் உத்தரவானது சீர்மையானது என்பதும் எங்களுடைய தெளிவான கருத்தாகும்.

22. 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளரின் சென்று காணும் உரிமைகளின் பொருட்டு, அதை எளிதாக்கும் மேல் உத்தரவுகளைப் பொறுத்தவரையில், தேவையான ஏற்பாடுகளை செய்வது குடும்பநல நீதிமன்றத்தையோ அல்லது உயர் நீதிமன்றத்தையோ சார்ந்ததாகும். குடும்பநல நீதிமன்றத்தின் முன்பு, இன்றிலிருந்து முப்பது (30) நாட்களுக்குள்ளாக குழந்தைகள் சம்பந்தப்பட்ட அனைத்து ஆவணங்களுடன் 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளரால், 2 மற்றும் 3-ஆம் எதிர்மேல் முறையீட்டாளர்கள் மேல்முறையீட்டாளரிடம் திருப்பியனுப்பி வைக்கப்படவேண்டும். ஒருவேளை மேல்முறையீட்டாளர் குழந்தைகளின் இடைச் சேர்க்கை ஏற்பாடுகளைச் செய்ய இயலவில்லையென்றால், அவர், 1-ஆம் எதிர்மேல்முறை யீட்டாளரிடம் அதை தெரிவிக்கலாம், அந்த நேர்வில் குழந்தைகள் தற்போது படித்துவரும் அதே பள்ளியில் தொடர்ந்து படித்து, அக்கல்வியாண்டு முடியும்வரையில் 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளருடன் தொடர்ந்து தங்குவர். இது, குழந்தைகளின் கல்வி பாதிக்கப்படாமலிருப்பதை உறுதிசெய்யும் பொருட்டேயாகும். மேல்முறையீட்டாளர் மற்றும் 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளரான இருவரையும், பரஸ்பர இசைவின் மூலம் பெற்ற விவாகரத்து தீர்ப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ள உரிமைகளும் கடமைகளும் கட்டுப்படுத்தும் என்பதையும் நாங்கள் தெளிவாக்குகிறோம். குழந்தைகள் நிறைவயது அடைந்தபிறகு, அவர்கள் தங்களுடைய சுயவிருப்பத்தின்படி செயல்படலாம் என்பதைக் கூறத்தேவையில்லை.

23. தரப்பினர்கள் அவரவர்களுக்குரிய செலவுகளை ஏற்கும்வண்ணம் மேல்முறையீடு அதற்கேற்ப அனுமதிக்கப்படுகிறது.

**[மாண்புமிகு நீதியரசர் திரு. குரியன் ஜோசப்]**

**[மாண்புமிகு நீதியரசர் திரு. சஞ்சய் கிஷன் கவுல்]**

**புதுடெல்லி.**

**26.10.2018.**

---

**<u>உரிமைத்துறப்பு</u>**

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கு பயன்படுத்திக்கொள்வதற்குட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப்பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."